**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

ஸ்ரீராமஜெயம்

# சிறந்த வைணவ மாலைகள்

நம்மாழ்வார் நூற்றெட்டு திருப்பதித்
தாலாட்டு விலை 0 4

மணவாளமாமுனி மாலை 0 1 0

சடகோபன் சந்திரகலாமாலை 0 1 0

ஷை மூன்று நூல்களுக்கும் எட்டணா ஸ்டாம்பு
அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சடகோபன் திவ்ய சரித்திரம் அச்சில் 2 4 0

(இதுவரை வெளிவராத புதிய காவியம்).

ஸ்ரீராம ஜெயம்
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவரவரமுநயேநம:
ஸ்ரீவாதூலதேசிகாய நம:

# சாத்துகவிகள்

எதிர்க்கோட்டை
எட்டயாபுரம் சமஸ்தான வித்வான்
அழகரய்யங்கார் குமாரர் நிமிஷகவி
சேஷய்யங்காரியற்றியது.

## சந்திரனுக்கும் சந்திரகலாமாலைக்கும்

சிலேடை

முதுமறைப்பாற்றிரையனையாய்
மொழிக்கடலக்கலைநிலவமுதச்சொற்றாற்றிப்
பொதுமறையாமிலக்கணங்கள் பொருந்தியும்
போய்வரல்குறையாப்புகழ்சார்ந்திருந்து
அதுமறையும்பணிப்பகையற்
றணிச்சந்த்ரகலாமாலையன்புகூர்ந்து
சதுமறையோர்குலத்தனந்தா
சார்யன்மகிழ்மாறனுக்கே சாற்றினனே. (1)

இலக்கண வித்வான் ஜீயர் கிருஷ்ணய்யங்கார்
இயற்றியது

தென்குருகைவாழனந்தன்றேமாறன்மேன்மதியின்
மன்னுகலாமாலைவழங்கினான்—பின்னும்
பணவாளரவின்பதமலரைப்போற்றிக்
குணமாகக்கைங்கரியங்கொள்ள. (2)

ஸ்ரீ-உபய
திருவாய்மொழிப்பிள்ளை மேலத்திருமாளிகை
திருவேங்கடாசாரியார்சுவாமி குமாரர் வித்வான்
ஸ்ரீநிவாசாசாரியாராலியற்றப்பட்டது.

சிரதிகரித்துவளர் தென்குருகைவாழனந்த
பாரதியுமாறன்மேற் பாடினான்—பாரதிலே
சந்த்ரகலாமாலையெனத் தத்துவநூலைத்தமிழா
மந்த்ரமெனயாரு மதிக்க. (3)

வில்லூர்
கீர்வாணவித்வான் கோபாலாசாரியர் குமாரர்
பத்தமடை ஹைஸ்கூல் முன்ஷி
திருமலையங்காரியற்றியது.

அனந்தாரியன்போல வகமேவிருளை யகற்றுதற்கு
அனந்தாரியன் சந்திரகலாமாலை யகமகிழ்ந்து

அனந்தாரியன் மாறனம்புயத்தாளி லருள்கவியே
அனந்தாரியன் மாறனடியார்கூட்டத்தமைத்திடுமே. (4)

---

சடகோபய்யங்கார் குமாரரும் மாணாக்கருமான
உபயகவி வித்வான் ஜீயப்பர் ஆவாப்
போத்தி அய்யங்காரியற்றியது.

மதிக்கலாமாலையினற்பாகனையமதுரமுறும்
மதிக்கலாமாலைமகிழ்மாலைமாறன்மலரடியில்
மதிக்கலாமாலைநிகரனந்தாரியன்மாநிலத்தோர்
மதிக்கலாமாலையிவனென்றுணரவனந்தனனே. (5)

---

தென்திருப்பேரை குடும்பகவி
ஸ்ரீநிவாசய்யங்கார் குமாரர் வித்துவான்
அனந்தகிருஷ்ணய்யங்காரியற்றியது.

சேட்பாலடரனந்தன்றேமாறன்செங்கமலத்
தாட்பாற்சகிக்கலைதார்சாற்றியதை—கேட்போர்க்குத்
தேம்பாகுஞ்சர்க்கரையுஞ்சீனியால்கற்கண்டும்
வேம்பாகுமப்பாமிக. (6)

சாத்துகவிகள் முற்றிற்று.



# ஸ்ரீமணவாளமாமுனிகள் காப்பு

இந்திரைவாழ் தென்குருகையெங்களிறைமாறன்மேற்
சந்திரகலைமாலைசாற்றினேன்—சந்ததமும்
குணவாளர்வாழுமெழிற்குந்தியர்கோன்றாள்சேர்
மணவாளமாமுனியைவாழ்த்தி.

## ஆசாரியன் வணக்கம் காப்பு.

வண்ணமணிமாடமமர்தென்குருகைவாழுமகிழ்
மாறன்றாளில்
விண்ணுலவுசந்த்ரகலைமாலைசொலயான்விரும்பி
விளம்பலுற்றேன்
கண்ணிபுனைகாரரங்கன்கமலமெனுங்கழலிணையைக்
கருதுங்கோயில்
அண்ணனெனுஞ்சிரங்காசாரியன்றனம்புயத்தா
ளகத்தில்வைத்தே.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவரவரமுநயே நம:
ஸ்ரீ வாதூல தேசிகாய நம:

# சடகோபன் சந்திரகலாமாலை

---

சீர்மேவுமெதிராஜரடியிணைப்போதில்திரு
தெண்டமொடுவீற்றிருப்புந்
திருவலியுமழகுமிகுமுத்ராமுப்புரிநூலுஞ்
செம்பொன்மகிழ்மாலைமார்பு
மேர்மேவுதிருஞானமுத்திரைக்கரதலமு
மெங்குநறைவீசுகின்ற
வெழிரிகழுகத்தாரிகாமமொடுநான்மறையை
யாவர்க்குமறியவெளிதாய்ப்
பார்மேவுசெந்தமிழ்ப்பாவைப்பகர்ந்திடும்
பதுமமலர்வாயுமிலகு
பங்கயத்தளவிழித்திங்கள்முகமுங்கொண்டை
பற்றியமுறாக்கொலியனுங்
தேர்மேவுமரசர்தொழுமடியரோலக்கமுஞ்
சேவிக்கநாளுமருள்வாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (1)

வரையாடலீகின்ற தாருவேபோற்கொடை
வழங்கிடுங்கன்னனென்றும்
மலையாசலத்தி லுறைகுறுமாமுனிக்குநிகர்
வண்டமிழ்க்கிறைவனென்றுந்
திரைமோதுபாற்கடற் றுயில்கூர்முகுந்தனிற்
றீர்வாதிதேவனென்றுந்
தேனூறுமலர்வாளிசெங்கரத்தேந்திடுஞ்
சிலையாரனங்கனென்றும்
விரையாருமகிழ்மாலையிண்டுதேன்வடிகின்ற
விடலனேநின்னையலது
வீணரைப்பாடியேகாலங்கழிக்கநீ
விட்டிடினினக்குநன்றோ
இரையாகிகரைமேவியுழலாதமுன்னநின்
திருவடிக்காட்கொள்ளுவாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (2)

பல்லாணஜந்து கவலட்சமாயப்புவிற்
பறவைவீரைந்துலட்சம்
பதினேருலட்சமாயூர்வனத்துற்றபின்
பன்னிரண்டேமரங்கள்
பொல்லாதமரைகளிற்பத்துமூன்றாய்ப்பின்
புவிதனில்மனிதனாய்க்காய்ப்
போகின்றதரிதுணைற்போந்திருந்தாலுநற்

புநிதமறையோர்களாகச்
செல்லாதகாயஞ்செனித்தபின்னையினுந்
திருநாமவைபவத்தைச்
செப்பவேதெரியாதுமருளுதென்னையநின்
றிருவடிக்காட்கொள்ளுவாய்
செல்லாருதண்டலையின்மூட்டபுறக்கனியினற்
செந்தேனிழிந்துபாயுந்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (௩)

பரதாரவீட்சணஞ்செய்யவோகண்ணினை
படைத்தனைகொல்லூழ்க்கினாலே
பைந்தொடைப்பரிமளங்கொள்ளவோவாய்கொடு
பரத்தையர்கள்புகழோதவோ
கரதலாமலகமாய்க்கனவினிற்பொருளெனக்
காதினாற்புகழ்கேட்கவோ
கனதனத்தருணியைத்தினதினம்புல்லவிக்
காயத்தைவைத்தாய்கொலோ
பரசமயநிரசனம்பண்ணுமகிழ்மாறநின்
பார்பஞ்சவிந்திரியத்தைப்
பற்றவேயொண்ணாதுசித்தப்வேறாகநீ
பார்த்திடிற்கருணைநிதியோ
சிரசினிற்சூடிகையுறுசிதசிறத்தன்னமே
இகழ்மூர்த்தியாயமைத்துத்

திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (4)

தானமீயென்றுசொலிமாவலியிடத்தவனி
தாண்டினைவிளைப்பினாலோ
தசகந்தராதிஸுரைச்சங்கரித்துற்றமிகு
தலையாறவென்றுதானோ
ஆனிரையைமேய்த்துவெகுவாயாசமுற்றதோ
ஆனைதுயர்காத்ததாலோ
அன்புடனாதமுநியின்புறத்தமிழ்மறையை
யருளியவிளைப்பினாலோ
மோனமாய்த்திந்திருணிநீழலிற்றிருஞான
முத்திரைக்கையுடைத்தாய்
முனுவரன்கூரனுலகாரியன்மணவாள
முனிபரவவீற்றிருந்தாய்
சேனையர்தலைவனேகாரிமகிழ்மாறனாய்த்
திருவவதரித்துவாழுந்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (5)

சந்ததமுமந்தருட்சகவாசமேயதிகம்
சாத்விகரினேசமில்லை
தருமநெறிசேராதகருமநெறியுற்றவன்
றயவென்பமிதான்றமறியேன்

கந்தனவனத்தமருகந்தமலர்யாவையுந்
நாரியர்க்கிந்தலோபி
நன்மொழிகடெரியாதவன்மொழிசொலுங்கொடிய
நாயினுங்கடையாயினேன்
இந்தவிதமாகவென்சரிதங்கள்முழுவது
மென்னறிவிலாதிருக்க
என்னபிழைசெய்தாலுநீபொறுத்தறிவிலா
வெளியனுக்கருள்புரிந்து
செந்தமிழிலாரணந்தந்தருளுமாறநின்
செய்யபதமுளரிதருவாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு (6)
திருமருவுமகிழ்மாறனே.

பங்கயப்பழனங்களென்றனக்குற்றிடப்
பகலிராவென்னுமொருகால்
பைந்தொடியரநுபோகநினைவுமொருகாலிலைப்
பார்முழுதுமாளவொருகால்
சங்கைகளிலாமலேமாளிடவர்பாற்கவிகள்
சாற்றிடநினைக்குமொருகால்
சதுமறையையுணரவொருகாலில்வேதாந்தமாய்ச்
சாரவுநினைக்குமொருகால்
மங்களமதாகவிளையாடவொருகாற்பரம
வைதிகநினைவுமொருகால்

வகைதோறுமெண்ணிமனமருளுமென்னையநின்
மலரடிக்காட்கொள்ளுவாய்
செங்கமலைமகிழ்மாலையாகவேவந்திடச்
செய்வித்துமார்பணைத்துத்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (7)

பாருக்குளேமிகப்பாவியேனாயினும்
பக்தர்போல்வேடமுற்று
பகவதானந்தத்தையான்பெறக்கருதவே
பஞ்சேந்திரியங்களெல்லாங்
கீரைகீழ்ப்புல்லுருவிபோலப்படர்ந்ததைக்
கிஞ்சித்துமெட்டாமலே
கெடுதலைப்பண்ணிடுங்கொடியமாபாதகக்
கிளிமொழித்துவரிதன்மேல்
மாரியேசென்றபின்வனிதையர்கள்போகமே
வற்றுதசுகமென்னவே
வதுவையினைவேட்டின்னம் வாழ்வமென்றெண்ணுது
மலரடிக்காட்கொள்ளுவாய்
தேரோடுவீதியமராதிநாதன்றனைத்
திருவடிகள்தொழுதுவாழுந்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (8)

வங்கமலிகடலுலகிலெங்கணுங்காசுபெற
வைகறைத்துயிலெழுந்து
மலமறமுழுகத்தினையலம்பிப்பவித்திரம்
வலக்கையிலேயணிந்து
பங்கமறவிரூறுநாமந்தரித்துநற்
பைம்பொனிறவட்சதையினைப்
பத்திரமதாகவேயுத்திரியம்வைத்துநற்
பரிசருளுமென்றளித்துச்
சங்கைகளிலாதுயான்கயவரைப்பாடிடச்
சாராதிருத்திநாகத்
தத்துவமதாகவேபத்தர்தொழுகின்றநின்
றளிணைப்பாடவருள்வாய்
செங்கமலவாவியிருபங்கினினெருங்குறச்
செங்கயல்கள்துள்ளியோடத்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு (9
திருமருவுமகிழ்மாறனே.

நாலாயிரந்தமிழ்ப்பாமறையுளோர்செய்யுள்
நாவினாலோதவில்லையோ
நாவீறனேமகிழ்மாறனேசடகோப
நம்பினேனென்னையென்றோர்
காலேனுமோதலையோவோதுவோர்சொற்களைக்
கனவிலுங்கேட்கவில்லையோ

கண்ணினுன்சேவைபண்ணுநாவினை
காலங்கழித்ததுண்டோ
பாலாளியற்றிடும்பிழையினைப்பெரியோர்
பரிப்பரென்றோதுமந்தப்
பழமொழியுமென்மட்டிலில்லையோகாக்கின்ற
பாரமுனக்கல்லவோ
சேயினந்துள்ளுகுயினின்றருபொழிலூற்
செங்கமலவாவியுஞ்சூழ்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (10)

நீணயம்பேசிமடவார்நயங்காட்டிநன்
னெஞ்சத்துவஞ்சமெண்ணி
நேசமாய்த்தனமிரண்டால்மயக்கிட்டவரை
நீள்விழிவலைப்படுத்தி
வேணுகானத்தினும்பிகவியப்புற்றமொழி
மெதுவாயுரைத்துரைத்து
மெள்ளவேதன்வசமதாக்கிவிடவர்கட்கு
வேலைதான்புரிவதன்றி
நாணயமவர்க்குள்ளவரையினும்வெகுவாக
நன்மைகளியற்றியப்பால்
நாயினுங்கடையாகவாசற்றுயிற்றுவரி
னட்பறுத்தருள்புரிகுவாய்

சேணளவுமணிமாடமோங்கிவான்பரிதியின்
றேரினைமறைத்துயர்ந்த
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (11)

உள்ளத்திலொருகோடிகள்ளம்வினையின்றசில
மொருபொய்சொலாதிருந்தா
லுதரம்பொறாக்காதபொருமல்வினைக்கிடு
மூர்ப்புச்சல்வினைமிக்குமோ
ரெள்ளளவிலாயினுந்தயையோடுதாக்ஷணிய
மேதொன்றுமில்லாமலே
ஏசியேபாகவதவபசாரமென்றனை
லெண்ணமுடியாததம்பப்
பள்ளத்திலேவிழுமஞ்சமாபாதகப்
பாவியேனாயினேனைப்
பானுகாத்துன்னுமோதவேசைதவிரிய
பக்தியையெனக்கருளுவாய்
தெள்ளமுதமதனைமொழிமள்ளியரிடுங்குரவை
சேணினையளாவுகின்ற
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (12)

சாத்விகமுனியத்ரிமைந்தனுக்குதயுகத்
தன்னில்மறைந்துபோன
தருமநெறிபுகலுமிதிகாசமறைமுதலான

சாஸ்திரமுறைக்கவர்ந்தாய்
நாற்றிசையிகழ்ந்திடுமிலங்கேசன்முடியறவே
நற்புகழ்த்தசரதற்கு
நந்தனனெனச்சொலத்திரேதாயுகத்திலேந்
நன்னாட்டில்வந்தவதரித்தாய்
சோத்திரந்தன்னிலேபார்த்தனுக்குபதேசஞ்
சொல்லிடத்துவாபரத்தில்
துவாரகாபுரியினுக்கிறைவனாய்க்கலிதனில்
துன்பத்தைதீர்க்குகுருகா
க்ஷேத்திரந்தன்னிலேகாரிதன்மதலையாய்
திராவிடமறையோதவந்தாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (13)

கந்தடுகளிற்றில்வருகாரியுடைநங்கையுங்
கரியமாலாதிநாதன்
கழலிணைவணங்கிநற்காண்முனையயாம்பெறக்
கருணைநீபுரிவையென்றா
வந்தனையியற்றவம்மாதவன்னம்பியை
வணங்குமின்னருள்வனென்ன
மன்னனவனடியிணைவணங்கிடக்கண்டுமது
மலடறத்தாளுமுன்றன்
மைந்தனாய்வருகிறேனென்றசொற்கேட்டபின்
மகிழ்ந்திடுங்காரிமன்னன்

மங்கைதன்மதலையாய்வந்துநான்மறையினை
மதுரகவிமகிழவருளித்
தின்திருணிரீமூலில்வீற்றிருக்காமெனென்ற
செல்வனையருள்புரிகுவாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (14)

அண்டமாயவனியாயப்புடன்றேயுவா
யளவில்வான்காலுமாகி
யரணயன்புருகூதனும்பருடனாகியிவ்
வகிலமேழுண்டுமிழ்ந்த
கண்டனுய்க்கயிலையங்கிரியாகிமேருவாய்க்
கருதுவோரகத்திருக்குங்
கருணையங்கடலாகியணுவினுக்கணுவுமாய்க்
கன்முதற்புல்லுமாகிச்
சண்டபார்க்கரனுமாய்ச்சந்திரன்சேயுமாய்
சனிமுதற்கிரகங்களாகி
சர்வஜீவன்களுக்கிறைவனாய்மூலமாய்ச்
சடமெனும்வாயுதன்னைத்
தெண்டனையியற்றிடுமாறனையெழுந்தருளு
செல்வனையருள்புரிகுவாய்
திரைபொருவுபொருநையிருகரைமருவுகுருகைவரு
திருமருவுமகிழ்மாறனே. (15)

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை